RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s19102

OPEN ACCESS

# விமல் குழந்தை வேலின் வெள்ளாவி புதினம் உணர்த்தும் வாழ்வியல் அறம்

**ம. இராதா [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம்-606001, தமிழ்நாடு, இந்தியா

# Life Virtue in Vimal Kulanthai Vael's Vellavi novel

**M. Radha [a, *]**

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College, Vriddhachalam-606001, Tamil Nadu, India

* Corresponding Author: radhaaadhava21113@gmail.com

Received: 09-09-2022
Revised: 03-11-2022
Accepted: 26-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Virtue is the fundamental factor for the glory and elevation of human life. A man can reach highest position in life if he follows virtue in every little action of his life. What distinguishes man from the animals is his character and the foundation of it is his virtue. He considered virtue as a reaction to his good and bad deeds, and wrote it in literature that life without virtue is futile and he who does not practice virtue is not a human being. Sangha era people practiced virtue in throughout their life. It can be understood from the fact that the Tamil word Ilvalkai means domesticity. As an extension of this, moral thoughts are prevalent in contemporary literary genres also. As an example, this article is to bring out the virtues of life found in the famous novel Vellavi by Vimal Kulanthai Vael.

**Keywords:** Virtue, Character, Vimal Kulanthai Vael, Vellavi

## முன்னுரை

மனித வாழ்வின் பெருமைக்கும் உயர்வுக்கும் அடிப்படைக் காரணிகளாக அமைபவற்றுள் அறம் முதன்மை பெறுகிறது. மனிதனின் ஒவ்வொரு சிறு சிறு செயல்களிலும் அறத்தைப் பின்பற்றுவானானால், அவனால் அடைய முடியாத உயரம் என்பதே இல்லை. விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்துவது அவனது பண்பெனில், அப்பண்பிற்கு அடித்தளமாவது அறமாகும். இலக்கியம் தோன்றுவதற்கு முன்பே மனிதன் கட்டமைப்பிற்குள்ளான வாழ்வை வாழத் தொடங்கி விட்டான். இலக்கியங்களில் அது மேலும் வலுப்பெற்றது. தான் செய்யும் நற்செயல்களுக்கும், தீவினைகளுக்கும் எதிர்வினையாக அறத்தையே கருதினான். அவ்வறமற்ற வாழ்வு வீண் என்றும், அறத்தைக் கடைப்பிடிக்காதவன் மனிதனே அல்லன் என்றும் இலக்கியங்களில் பதிவிட்டான். அறத்தின் உண்மைத் தன்மையை, உறுதித் தன்மையை உலகம் அறியச் செய்வதில் இலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அகவாழ்வு, புறவாழ்வு என இருவகையான வாழ்க்கையை வாழ்ந்த சங்கச் சான்றோர்கள் இரண்டிலுமே அறத்தைக் கடைபிடித்தனர். இல்வாழ்க்கை என்ற சொல் இல்லறம் என்று அறத்தின் பெயராலே குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து உணரலாம். புற வாழ்விலும் பல்வேறு அறங்களைப் பின்பற்றினர். இதன் நீட்சியாகத் தற்கால இலக்கிய வகைகளிலும் அறச் சிந்தனைகள் விரவி உள்ளமையை எடுத்துக்காட்டும் விதமாக விமல் குழந்தைவேலின்' வெள்ளாவி' எனும் புலம்பெயர் புதினத்தில் காணலாகும் வாழ்வியல் அறக்கருத்துகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வாகும்.

## அறம்- சொற்பொருள் விளக்கம்

'அறம்' என்ற சொல்லுக்குக் கற்பு, கண்ணியம், கடமை, புண்ணியம், நல்வினை என்ற பல்வேறு பொருள்களை அகராதிகள் சொல்கின்றன. தமிழில் 'அறம்' என்ற சொல்லுக்கு முன்னோடியாகப் பழமொழி, முதுமொழி, மூதுரை, முதுசொல், வாயுறை வாழ்த்து, நன்மை, நன்று, நல்லது, முறைமை, ஒழுக்கம் போன்ற சொற்கள் காணக் கிடைக்கின்றன. அறம் என்பது நன்மையின்பால் அறிவைச் செலுத்துவதும், தீமையைச் செய்யாமல் இருப்பதும் ஆகும். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியை அறம் எனலாம். அறம் என்ற சொல்லிற்கு, "அறம்- கையறம், தர்மம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோர் இயல்பினொன்று" என்று தமிழ் மொழி அகராதி பொருளுரைக்கிறது.

## காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் அறக் கோட்பாடுகள்

காலத்தால் முந்தைய சங்க இலக்கியங்களில் அறம் என்ற சொல் பரவலாகக் காணப்படுகிறது. அதன் பொருண்மை இடத்திற்கு ஏற்றாற்போல் மாறுபட்டாலும் நன்மை என்ற ஒற்றைப் பொருளையே தருகிறது. முறையறிந்து திறை பெறுதல், ஆயுதமற்றோரைப் போரில் தாக்காமல் இருத்தல், விருந்தினரைப் பேணுதல், மானத்தையே பெரிதெனப் போற்றுதல், உலகத்தைவிடப் பெரிய பொருள் கிடைப்பதாயினும் பழிச் செயலைச் செய்ய நாணுதல், வீர மரணத்தையே விரும்புதல், நட்பிற்கு மதிப்பு கொடுத்தல் ஈவதாக இருந்தால் உயிரையும் கொடுக்கத் துணிதல் போன்ற பல்வேறு அறம் தழுவிய செயல்களைப் புற இலக்கியங்கள் காட்டுகின்றன.

தலைவனுக்குரிய கடமை, ஒழுக்கம், வீரம், அறிவு, தலைவிக்குரிய பண்புகள், தோழி, செவிலி, நற்றாய்க்குரிய செயல்கள், குறிப்பாக அறத்தொடு நிற்றல் எனும் நிலை, களவு, வரைவு, கற்பு என அக வாழ்விற்குரிய அறங்களை அக இலக்கியங்களும் பேசுகின்றன.

சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து எழுந்த அற இலக்கியங்கள் அனைத்துமே வாழ்வியல் அறத்தை வலியுறுத்துகின்றன குறிப்பாக உலக பொதுமறையான திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால் என இரு பால்களிலும் புற வாழ்வியல் அறத்தை எடுத்துரைக்கும் வேளையில் காமத்துப்பால் அக வாழ்வியல் அறத்தை பகர்கிறது.

"அறத்தின் ஊஉங்கு ஆக்கமுமில்லை அதனை

மறத்தலின் ஊங்கில்லை கேடு"

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற”

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்

புறத்த புகழும் இல"

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

என்று பல இடங்களில் அறத்தை வலியுறுத்துகிறது வள்ளுவம் (Puliyur Kesigan, 2009). 'அறன் வலியுறுத்தல்' எனும் தனி அதிகாரம் அமைந்திருப்பதே இதற்குச் சான்று.

புரட்சிக் காப்பியமான சிலம்பின் முப்பெரும் உண்மைகளுள் முதல் உண்மையான 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்' என்ற தொடரில் வரும் அறம் என்ற சொல்லிற்கான சான்று காப்பியத்தின் இறுதியில் இடம்பெறுகிறது. சிலம்பு முழுவதுமே அறத்தை நிலைநாட்டும் அத்துனை கருத்துக்களையும் இளங்கோவடிகள் பரவலாகக் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது.

மணிமேகலையோ முழுவதும் அறக்காப்பியமாகவே திகழ்கிறது. உலக உயிர்களின் பசிப்பிணி போக்கும் மாபெரும் அறச்செயலை மணிமேகலை சிறிதும் குறைவின்றி காப்பியம் முழுமையும் உணரலாம்.

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (Silamboli chellappan, 1998)

என அறம் பாடுகிறது மேகலை. வளையாபதியும் குண்டலகேசியும் கூட முழுவதும் அறக்கருத்துகளையே வலியுறுத்துகின்றன.

இவ்வாறு சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் என அனைத்துமே இயன்றவரை மனித வாழ்விற்கு அறத்தையே செப்புகின்றன. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வடிவங்களான கவிதை, சிறுகதை, நாடகம், உரைநடை, புதினம் போன்றனவும் தத்தம் அளவில் மனித வாழ்வின் மேன்மைக்கான கருத்துக்களைப் பகர்கின்றன. புதின இலக்கிய வகை இன்றைய காலச் சூழலில் அடைந்திருக்கும் உயரம் அசாத்தியமானது. குறும் புதினம் முதல் 1000 பக்கங்களைத் தாண்டும் புதினங்கள் வரை அளவிலும் மாறுபட்ட கோணத்தைக் கொண்டு விளங்குகின்றன. அளவில் சிறியதாயினும் பெரியதாயினும் களமும் களத்தில் இயங்கும் பாத்திரப்படைப்புகளின் வழியே தான் அறக்கருத்துக்களை மிகுதியாகச் சொல்கின்றன. புலம்பெயர் புதினங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

## வெள்ளாவி புதினத்தில் வாழ்வியல் அறம்

புலம்பெயர் இலக்கியங்களில் புதினங்கள் தனித்த கவனத்தைப் பெறுபவை. அவற்றுள் அம்மக்களின் வாழ்க்கைப் பாடுகளைக் குறித்தான விவரணைகள் விளக்கமாக எடுத்துக்காட்டப்படுகின்றன. பல்வேறு சமூகம் சார்ந்தவர்களின் வாழ்வியல், ஏற்றத்தாழ்வு, போர் பற்றிய செய்திகள் என அவர்களின் ஆதியந்த வாழ்வின் அத்தனை நிகழ்வுகளும் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வகையில், விமல் குழந்தைகளின் 'வெள்ளாவி' புதினம் இரு சமூகத்தவர்களுக்கு இடையிலான சாதி வேறுபாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, தொழில் சார்ந்த செய்திகள், ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் நிகழ்வுகள், பாலியல் வன்புணர்வுகள் என ஒரு அடிமை சமூகத்தின் அத்தனை இடர்ப்பாடுகளையும் இப்புதினம் எடுத்துரைக்கிறது. இவற்றினூடாக அவர்கள் கடைப்பிடிக்கும் அறத்தினையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இப்புதினம் வண்ணார் சமூகத்தவர்களின் வாழ்க்கையை விவரிக்கிறது. அவர்களின் கலைகள், விளையாட்டு, தொழில் சார்ந்த அறங்களை எடுத்துக்காட்டுகிறது.

## கலைகளில் வெளிப்படும் அறம்

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்பவை கலைகளே ஆகும். இயல், இசை, நாடகம், ஓவியம் முதலானவை முதன்மைக் கலைகள். இவை மக்களின் வாழ்வியலை பிரதிபலிப்பதுடன் மனத்தின் ஓர்மையையும் புலப்படுத்துகின்றன. இயல் தமிழ் இலக்கியங்களில் தொன்மக்களின் கலைகள் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளமைக்கான காரணம், கலைகள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குக் கருவியாகச் செயல்படுகின்றன.

ஈழத்து மரபினை உள்வாங்கிக் கொண்டு படைக்கப்பட்டுள்ள தமிழ்ப் புதினங்களில் ஈழத்தமிழ் மக்களின் அறம் சார்ந்த கலைப் பண்பாட்டுக் கூறுகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. வெள்ளாவி புதினத்தில் நாடகக்கலை குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. "நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளில் தொண்ணூறு விழுக்காட்டுக் கலைகள் ஆண் கலைஞர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. நிகழ்த்துக் கலைகள் வலுவான, அதிவேகமான ஆட்ட முறைகளையும் உரக்கப் பாடும் இசைத்தன்மையும் கொண்டவையாக இருப்பதால் ஆண்களாலேயே இவற்றில் பயிற்சி கொண்டு நிகழ்த்திக் காட்ட முடிகிறது. பெண்களாகவே மாறி உணர்ந்து நடித்து மக்களின் பாராட்டையும் பெறுகின்றனர்".

## கண்ணகிக் கூத்து

அவ்வகையில் கண்ணகிக் கூத்து, அரிச்சந்திர மயான காண்டம், பாஞ்சாலி சபதம், ராமாயணம் முதலிய தமிழ்த் தொன்ம நாடகங்கள் ஈழத்தில் நடிக்கப் பெறுகின்றன. ஈழத்து நாடகக்கலை மரபில்

வெகுஜன மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்ட நாடகம் கண்ணகிக் கூத்தாகும். அதிகாரத்தை நோக்கி கண்ணகி கேட்கும் அறம் சார்ந்த கேள்விகள், நியாயங்கள் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளன.

"பாண்டியனே எனவுரைத்துப் பைந்தொடியாள் நிற்பளவில்

தானபேரி மீனவர்கோன் தமிழ் மாற னேதுரைப்பான்

ஈண்டு புகழ் புனைசோழ மண்டலமுன் னிடமானால்

கூன்டிறண்ட முகிற்குழலாய் கூறாய் உன் குலத்தை என்றான்

குலம் கேட்ட மீனவனைக் கொடையிடையார் முகம் நோக்கி

நலம் காட்டு மாதவிக்கு நற்பொருளை மிகத்தோற்றி

மலங்கா நின்றவன்தேவி மணிச்சிலம்பு தனைத் திருடிக்

கலங்கா நின்றுயிரிழந்த கள்வர்குலக் கன்னியென்றாள்" (Vimal kuzhandhivel, 2004)

மேற்கண்ட பாடலில் தமிழ் ஏட்டிலக்கிய கருத்தியல்களில் சற்றே மாறிய கதை வடிவாக கண்ணகி கூத்து நிகழ்த்த பெற்றுள்ளது. இருப்பினும் தமிழ் மரபை மீறாத தமிழ்த்தொன்மத்தை ஈழத்து மக்கள் நடித்துள்ளனர் என்பதையும், அத்தகைய கதை மரபு தமிழர்களின் ஒப்பற்ற வீரத்தையும் வாழ்வியல் அறத்தையும் புலப்படுத்தும் வண்ணம் நடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

## அரிச்சந்திர நாடகம்

உண்மையே உலகில் உயர்ந்த தவம் என்பர். சத்தியமே சாகாத வரம் என்பர்.

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தோடு

தானம் செய்வாரின் தலை"

"பொய்யாமை அன்ன புகழ் இல்லை எய்யாமை

எல்லா அறமும் தரும்"

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று"

சத்தியத்தை மீறாத வாழ்வே அறவாழ்வு என்ற தமிழ்ப் பண்பாட்டின் நிகழ்த்து வடிவமே அரிச்சந்திர நாடகம். அரிச்சந்திர மன்னனையும், அவனது மனைவியின் நிலையையும் சித்திரிப்பது சத்திய சோதனை எனும் அரிச்சந்திர நாடகம் ஆகும். ஈழத்துக் கலை மரபில் இந்நாடகம் இன்றளவும் உயர் மதிப்பைப் பெற்றுத் திகழ்கிறது. எக்காலத்திலும் வளைந்து கொடுக்காத அறத்தை அறவழிப்பட்ட வாழ்க்கையை வலியுறுத்துவதே இந்நாடகத்தின் நோக்கமாகும்.

"நேத்து ராவு நடந்த அரிச்சந்திர மயான காண்ட கூத்துலையும் சாமித்தம்பி தான் சந்திரமதி. விசப்பாம்பு கடிச்சு செத்துப்போன மகன் லோகிதன தூக்கிக் கொண்டு வந்து சுடலையில் எரிக்க அனுமதி கேட்ட நேரம் சுடுகாட்டுக் காவலாளிக்குக் கொடுக்க வேண்டிய கூலிய குடுத்துப்போட்டு உண்ட மகனை பத்தவை. இல்லாட்டி ஓட்டுடி எண்டு அரிச்சந்திரன் துரத்தியுட பெத்த மகன பத்தவைக்கக்கூட காசில்லையே எண்டுற வேதினையில மனம் வெதும்பி வெந்து மகனக் கையில ஒத்திக்கொண்டு சொல்லுடா என் மகனே நமக்கேனிந்த துயரமெண்டு" என்று அரிச்சந்திரன் நிலையையும், சந்திரமதியின் துயரத்தையும் சித்தரிக்கும் அரிச்சந்திர நாடகம் ஈழத்துத் தமிழர் வாழ்வியலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையில்லை (Vimal kuzhandhivel, 2004). வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமில்லாமல் வாழ்வின் மனசாட்சியாகவும் உயிர் வாழ்தலின் அறக் கொள்கையாகவும் கருதுகின்றனர். பொதுமைப்படுத்தப்பட்ட சத்தியத்தை விதைக்கும் கலை வடிவமாக ஈழத்து மக்கள் இந்நாடகத்தை இன்றளவும் நிகழ்த்துகின்றனர் என்பதை அறிய முடிகிறது. எனவே

ஈழத்து மக்கள் அறத்தின்பாற்பட்ட வாழ்வியலையே கொண்டிருந்தனர் என்பதையும், அதன் தொடர்ச்சி அறுபடாமல் இருக்கவே மீண்டும் மீண்டும் அதனைக் கலை வடிவில் வாழ்ந்து பார்க்கின்றனர் என்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

## விளையாட்டில் அறம்

அறியாத இளம்பருவத்தில் மனமகிழ்ச்சிக்காக விபரீதமான விளையாட்டுகளைக் குழந்தைகள் விளையாடுவது இயல்பானது. அவ்வகையில் ஈழத்தில் சிறியவர்களால் விளையாடப்படும் விளையாட்டு ஓணான் பிடித்தல் ஆகும். ஓணானின் கண்களில் கள்ளிப்பால் வைத்து வாயில் புகையிலை திணித்து மயக்க நிலையில் துள்ளிக் குதிக்கும் ஓணானின் வலியைப் பார்த்து மகிழும் குழந்தைகள் பற்றிய பதிவுகள் வெள்ளாவி புதினத்தில் காணப்படுகின்றன.

"புத்தி அறியாத விளையாட்டுப் புள்ளையளெல்லாம் சேந்து ஓணாண்ட கழுத்துல சுருக்குப்போட்டுப் பிடிச்சி ஓணான்ட வாய அமத்திவைச்சி துறந்து புகையிலைய வாய் நிறைய திணிச்சு உட்டுடுங்கள். புகையிலை மயக்கத்துல தலைய ஆட்டி ஆட்டி ஓட ஏலாம தட்டுத்தடுமாறி முட்டி மோதி திரியுற ஓணானப்பாத்து சந்தோசத்துல கைதட்டி சிரிச்சி துள்ளிக் குதிக்கிதுங்கள் புள்ளக்கிளைகள். அதுக்குப்பிறகு ஓணான ஓடச்சொல்லி கல்லால எறிஞ்சா ஓட ஏலாத ஓணான் கடைசியில் கல்லெறி பட்டுச் செத்துப் போயிரும். இதெல்லாத்தையும் பார்த்துக் கொண்டு காத்திருக்கிற காக்காய் ஓடி வந்து ஓணான தூக்கிக்கொண்டு போய் கொத்திக் கிளரும்" பக்குவப்படாத பருவத்தில் நிகழ்த்தப்படும் இத்தகைய விளையாட்டுக்கள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. இந்நிகழ்வே பின்னாளில் உயிரிரக்கத்தை ஏற்படுத்தும் அறமாக மாற்றம் பெறுவதை அறியலாம்.

## தொழில் சார்ந்த அறம்

வெள்ளாவி புதினம் வண்ணார் சமூகத்தைப் பற்றிப் பேசும் புதினமாகும். வண்ணர்களின் தொழில் துணி வெளுப்பதாகும். "விடிஞ்சா ஊடு ஊடாகப் போய் உரித்த உடுப்புகளை எடுத்து வந்து பின்னேரத்துல வெள்ளாவி கொதிக்க வச்சு, துணிகளுக்குக் குறி வைச்சி, அவிச்சி, ஆத்துக்கு எடுத்துக் கொண்டு போய் அடிச்சிக் கழுவி, காய வச்சி, மடிச்சி குடுத்து உழைக்கிற அந்த உழைப்புக்குக் கிடைக்கிற வருமானத்திலும் ஒருத்தருக்கு ஒருத்தர் ஏத்தம் இறக்கம் இல்லாமல் இல்ல." (Vimal kuzhandhivel, 2004)

உயர்சாதி இந்துக்களின் வீடுகளில் அழுக்குத் துணி எடுத்துத் துவைத்துத் தேய்த்துக் கொடுப்பது வண்ணர்களின் வழக்கமாகும். கொதிக்க வைத்த நீரில் அவித்து வெளுக்கின்றனர். ஒவ்வொருவர் துணியின் அடையாளத்திற்காகக் குறிவைத்தல் முதலிய தொழில்நுட்பங்களைச் செய்கின்றனர். இவ்வாறு செய்யும் வேலைக்குக் கூலி மிகவும் குறைவாகவே கிடைக்கின்றது என்று கூறுகின்றார்.

"புடவை வெளுக்கிற ஊட்டுப் பொண்டுகள் ஏதும் ஊட்டு வேலை செய்யச் சொல்லிக் கேட்டா அதையும் மாதவி செய்ஞ்சி குடுப்பாள். பாவம் கைப்புள்ளகாரியெண்டு செஞ்ச வேலைக்குத் தேங்காய் அரிசியெண்டு ஆக்கள் குடுக்கிறதுமுண்டு" (Vimal kuzhandhivel, 2004)

என்று கூறுவதிலிருந்து வண்ணார் சமூகத்தினரை மேல்சாதி மக்கள் ஆதரித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. தொழில்சார் பண்பாட்டு வாழ்வில் வேலை செய்பவர்களுக்கு வேலை கொடுப்பவர்கள் ஆதரவும் அவர்களது குடும்ப நலனுக்குப் பொருளுதவியும் செய்து பாதுகாக்கும் அறச்சிந்தனைகள் கொண்டவர்களாக வெள்ளாவி புதினத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை

மனித வாழ்வில் பல்வேறு பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்கள் இயல்பாகவே கடைபிடிக்கப்படுபவை. அதில் அறமும் ஒன்றாகச் சேர்கிறது. சங்க காலம் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை அறத்தின் மேன்மையை நன்கு உணர்த்துகின்றன. தொட்டில் பருவத்திலிருந்தே

அறம் துவங்கி விடுகிறது. 'கொடையும் தயையும் பிறவிக் குணம்' என்று அவ்வையார் பிறப்பிலிருந்தே அறப் பண்புகள் மலர்வதைக் காட்டுவார். சங்ககாலம் அவரவர் தம் கடமையை முறையாக ஆற்றுவதை அறமாக எண்ணியது. சங்கம் தொட்டு இக்காலம் வரை இலக்கியங்கள் யாவும் மனித வாழ்விற்குத் தேவையான அறத்தையே தத்தமது உத்தி முறைகளில் வலியுறுத்தி வருகின்றன. புலம்பெயர் புதினமான விமல் குழந்தைவேலின் 'வெள்ளாவி' புதினமும் தனக்கேயுரிய முறைமையில் எடுத்தோதுகின்றமையை அறிய முடிகிறது. கலை, விளையாட்டு, தொழில் என மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் அறத்தைப் பின்பற்றுவதை உணர முடிகிறது. புலம்பெயர்ந்து வாழும் நிலையிலும் இயன்றவரை அறத்தைக் கடைப்பிடித்து வாழும் மக்களின் உயர்ந்த பண்பினை ஏனைய படைப்புகளை ஆராய்ந்தால் மென்மேலும் உணர முடியும்.

## References


Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India

Silamboli chellappan, (1998) Manimegalai Mollamum Uraiyum, Bharathi pathippagam, Chennai, India.

Vimal kuzhandhivel, (2004) Vellavi, Uyirmmai Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License